சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.K. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2026 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 02 ஆம் நாள்)

அசல் வழக்குஎண். 66/2025

CNR.No. TNCB190002722025

திருமதி. ஜி.ராஜேஷ்வரி, க/பெ. குருசாமி, வயது 55, வசிப்பிட முகவரி கதவு எண்.4/29, டாக்டர் டேனியல் நகர், தொப்பம்பட்டி பிரிவு, வடமதுரை, குருடம்பாளையம், கோயமுத்தூர் , ...வாதி

-இடையே-

திரு. தார்மேந்திரன், த/பெ. வேலுச்சாமி, இந்து, வயது சுமார் 44, வசிப்பிட முகவரி கதவு எண் .3/178, வெள்ளியங்காடு கிராமம் , மேட்டுப்பாளையம் தாலூக்கா , கோயமுத்தூர் மாவட்டம். ....பிரதிவாதி

இவ்வழக்கானது பிரதிவாதி, மீதமுள்ள கிரைய தொகை ரூ. 4,00,000/- த்தை பெற்றுக் கொண்டு ரூ.9,00,,000/- ம் மதிப்புள்ள தாவா சொத்தினை வாதிக்கு கிரையம் செய்து தர உத்தரவிடுமாறும் தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலம் தாவா சொத்தினை வாதியின் பெயருக்கு கிரையபத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்க உத்தரவிடுமாறும் அல்லது பிரதிவாதிக்கு வாதி செலுத்திய முன்பணத்தொகை ரூ.5,00,000/- த்தை பிரதிவாதி பெற்ற தேதியிலிருந்து திரும்ப செலுத்தும் நாள்வரையில் 12 சதவீதம் வட்டியுடன் சேர்த்து திரும்ப செலுத்தமாறும் வாதிக்கு பிரதிவாதி செலவுத் தொகையுடன் கொடுக்க உத்தரவிடவேண்டுமாய் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் - 25.04.2025

வழக்குமூலம் ஏற்பட்ட நாள் - வெள்ளியங்காடு கிராமம், மேட்டுப்பாளையம் தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம் நீதிமன்ற ஆள்வரை எல்லைக்குட்பட்ட பகுதியில் 15.03.2022, 20.04.2022, 13.03.2024, 05.03.2025, 17.03.2025, ஆகிய தேதிகளிலும் அதன்

பின்னிட்டும் ஏற்பட்டுள்ளது.

வழக்கு மதிப்பு விபரம் - நீதிமன்ற ஆள்வரை மற்றும் நீதிமன்ற கட்டணத்தின் பொருட்டு வழக்கு மதிப்பு ரூ .9,00,000/-/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்புச் சட்டம் பிரிவு 42-ன் படி நீதிமன்ற கட்டணம் ரூ.27,000/- செலுத்தப்பட்டுள்ளது.

Details of Valuation

For the relief of Specific Performance of the agreement and delivery of Possession the amount of consideration as per the agreement is	-	Rs.9,00,000.00
Court fee payable thereon for Prayer A Under Section 42(a) of Tamil Nadu Court Fee Act is	-	Rs.27,000/-

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 04.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. எஸ். ஜீவராஜ், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு . க. சதீஸ், அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

தீர்ப்பாணை

1. வாதி கோரிய பிரதான பரிகாரமான குறித்த வகை நிறைவேற்று பரிகாரம் அனுமதிக்கப்பட்டு மாற்று பரிகாரம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. தாவா சொத்தின் மீதி கிரைய தொகையான ரூ.4,00,000 / ஐ பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு 1 மாத காலகெடுவிற்குள் வாதி பெயரில், வாதி செலவில்

கிரையம் செய்து சுவாதீனம் ஒப்படைக்கும்படி தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. வாதிக்கு பிரதிவாதி வழக்கின் செலவுத் தொகையாக ரூ. 27.020/-ஐ கொடுக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

செலவுத் தொகை பட்டியல்

வாதி தரப்பில்			பிரதிவாதி தரப்பில்
தாவாவிற்கு கட்டணம்	-	ரூ.27,000/-	--இல்லை -
வக்காலத்துக்கு கட்டணம்	-	ரூ. 20/-	
மொத்தம்	-	ரூ,27,020/-	

SCHEDULE OF PROPERTY

Coimbatore Registration District, in Mettupalayam Sub Registration District, Coimbatore Taluk, in Mettupalayam taluk, in Velliankadu Village (Previously) thozahmpalayam Village in S.F. No. 1076 acres 6.34, in S.F.No.1075 acres 8.53) western part acres 1.09 1/2 as per the patta no.1106, in which

East of ... Tamil Nadu Water Board's land in S.F. No.323/2

South of ... 15' cart track road in S.F.No.323/3 landed property

North of ... Property belonged to Prabhu in S.F.No.323/3

West of ... Property belonged to Jayamani in S.F. No.323/2

In middle of this, acres 1.27 of land along with a common right to use the mamool cart track roads and other appurtenances etc.,

This property is situated in within the limits of Velliankadu Panchayath.

2026 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,